REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 99030

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 25உ வியாழன் (8—3—56) ★ ★ வெளியூர்: மாசி 26உ வெள்ளி (9—3—56) [இதழ் 227

பிரெஞ்சு மொழியில் சிலப்பதிகாரம்!

பிரெஞ்சு மொழியில் சிலப்பதிகாரம் என்று கேட்கும்போதே மகிழ்ச்சியாயில்லையா? இயற்கைதானே!

சர்வதேச நிறுவனத்தின் ஒரு பிரிவான ஐ. நா. கல்வி, சமூக, கலாச்சார கழகத்தினர், சிறப்பான இந்திய (!) இலக்கியங்களை ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் பெயர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இதற்காகும் செலவில் மிகப் பெரும் பகுதியை அந்தக் கழகத்தவரே ஏற்றுக்கொண்டு வருகின்றனர்.

இந்தியப் பேரரசும் இதுவரை இந்தக் காரியத்திற்காக ரூ 80

(4-ம் பக்கம் பார்க்க)

அறிவித்தபடி செயல்பட வாரீர்!

வாக்கெடுப்பு நடத்த வழி செய்வீர்

நேருவுக்குக் கூட்டணி கோரிக்கை

கடமையாற்றப் பாராளுமன்றத் தமிழ் உறுப்பினர்களுக்கு அழைப்பு

வழக்குகளைத் திரும்பப்பெற வேண்டுகோள்

சென்னை, மார்ச் 8—

'தமிழக — கேரள எல்லை பற்றிய தகராறுள்ள பகுதிகளில், அப்பகுதி மக்களிடை வாக்கெடுப்பு நடத்தக் கோருவது நியாயமானதே' என்று பாராளு மன்றத்தில், பிரதமர் நேரு பேசினாரல்லவா? 'வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ' என்பதுபோல, 'ஏதோ பேசிவைத்தோம்' என்றிருந்து விடாமல், தெரிவித்த கருத்தை அமுல் செய்ய வேண்டுமென சென்னை சர்வ கட்சிக் கூட்டணி நினைவூட்டியுள்ளது.

'தமிழ் மக்களின் பிரதிநிதிகள்' என்ற முத்திரையோடு டெல்லி பாராளு மன்றத்தில் வீற்றிருக்கும் தமிழக மக்கள் சபை உறுப்பினர்கள், தமிழ் மக்கள் ஒருமித்து பிப். 20-ந் தேதி அர்த்தால் மூலம் வெளிப்படுத்தியுள்ள கருத்துக்களை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும் என்றும் கூட்டணி நினைப்பூட்டியிருக்கிறது.

நேரு பண்டிதர் தெரிவித்த ஜனநாயக முறை யோசனையை அவருக்குச் சுட்டிக்காட்டி, அதற்கான ஏற்பாட்டினைச் செய்யுமாறு வற்புறுத்த வேண்டியது தமிழகத்திலிருந்து சென்றுள்ள மக்கள் சபை உறுப்பினர்களின் கடமையாகும் என்பதையும் கூட்டணி சுட்டிக் காட்டியுள்ளது

கூட்டணியின் இதுபற்றிய முடிவுகளை பிரதமர் நேருவுக்கும், பாராளு மன்றத் தமிழக உறுப்பினர்களுக்கும் கூட்டணித் தலைவர் பி. டி. இராசன் அவர்கள் அனுப்பியிருக்கிறார்.

கூட்டணியின் செயற்குழுக் கூட்டம் நேற்று மாலை 6 மணி அளவில், கூட்டணித் தலைவர் பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் கூடிற்று.

செயற்குழு உறுப்பினர்களான ப ஜீவானந்தம், ம. பொ. சிவஞானம், என். வி. நடராசன், ஏ. சுப்பிரமணியம், ஜி. உமாபதி, கே. விநாயகம் ஆகியோரும், கூட்டணி உறுப்பினர்களான நல்லசிவம், எம். பி. சுப்பிரமணியம், டி. கே. சண்முகம் ஆகியோரும், மற்றும்தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, முகவை - ஆர். எஸ். பாண்டியன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கூட்டணிச் செயற்குழு நிறைவேற்றிய தீர்மானங்கள் :—

1. தட்சிண ராஜ்ய அமைப்பை எதிர்த்தும், தமிழக எல்லைப் பிரச்சினைகளில் நியாயம் கோரியும் அமைதியாக நடைபெற்ற கிளர்ச்சிகளை ஒட்டி சர்க்கார் தொடுத்துள்ள வழக்குகள் அனைத்தையும் வாபஸ் பெறுமாறு சர்க்காரை சர்வகட்சிக் கூட்டணி கேட்டுக்கொள்கிறது.

2. தகராறுள்ள தமிழக - கேரள எல்லைப் பகுதி பற்றிய பிரச்சினையை அந்தந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் அபிப்பிராயப் படியே தீர்த்து வைக்குமாறு கேட்பதில் நியாயம் இருக்கிறது என்று அண்மையில் பாராளு மன்றத்தில் பிரதமர் நேரு அவர்கள் பேசியிருப்பதால், அவருடைய கருத்துப்படியே தமிழக கேரள எல்லைத் தகராறுகளைத் தீர்த்துவைக்குமாறு இந்தியப் பிரதமரை சர்வகட்சிக் கூட்டணி கேட்டுக்கொள்கிறது. இது சம்பந்தமாகப் பாராளுமன்றத்தில் உள்ள தமிழக உறுப்பினர்களும்வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூட்டணி கேட்டுக்கொள்ளுகிறது.

3. தமிழக ஆந்திர எல்லைப் பிரச்சினையில் இந்திய அரசியலார் ஏற்கனவே வாக்குறுதி தந்துள்ளபடி உடனடியாக எல்லைக் கமிஷனை நியமித்து மாநில புது அமைப்பு மசோதா பாராளு மன்றத்தில் சட்டமாக்கப்படு முன்பே இப்பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு இந்திய அரசியலாரை சர்வகட்சிக் கூட்டணி கேட்டுக்கொள்கிறது.

முதன்மந்திரி ஒரு 'குட்டி இட்லர்'

மேற்கு வங்க முதன் மந்திரி டாக்டர் பி. சி. ராய் ஒரு 'குட்டி இட்லர்' என்று எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர் சட்டசபையில் வர்ணித்திருக்கிறார்.

வரவு-செலவுத் திட்டத்தின்மீது நடைபெற்ற பொது விவாதத்தின் போது பேசிய அவர் குறிப்பிட்டதாவது :—

"ஒரு மந்திரிசபை என்பது கூட்டுப் பொறுப்புடையது என்று அரசியல் சட்டம் வருணிக்கிறது; ஆனால், மேற்கு வங்கத்தில் முதன் மந்திரி தனது செயலாளர்களுடன் ஆலோசித்துக்கூறும் திட்டங்களை அப்படியே ஏற்றுக்கொள்பவர்களாகத்தான் இதரமந்திரிகள் இருக்கின்றனர். மாநிலத்தில் ஒரு ஜனநாயக ஆட்சி நடைபெறவொட்டாது செய்துவருகிறார், இந்த முதன் மந்திரி'

"மேற்கு வங்கம் — பீகார் இணைப்பு போன்ற முக்கியமான விவகாரங்களில்கூட இதர மந்திரிகளைக் கலந்தாலோசிப்பதில்லை, இந்த முதன் மந்திரி! இதர மந்திரிகளை எல்லாம், பள்ளிப் பிள்ளைகளைத் தலைகனத்த ஆசிரியர் நடத்துவதுபோல நடத்துகிறார்!

"இந்தச் சர்வாதிகாரியை—குட்டி இட்லரைத் தட்டிக் கேட்பதற்கு ஆளும் கட்சியில் எவரையும் காணோம்."

திராவிடத் தாயின் மடியில் பொற்குவியல்

தமிழ்நாடு, ஆந்திரம், கேரளப் பகுதிகளில் எண்ணெய்க் கிணறுகள்

மலபார் மாவட்டத்தில் தங்கச்சுரங்கம்

ஆராய்ச்சி தரும் தகவல்கள்

திராவிடத்தில் — தென்னாட்டில் பூமிக்கடியில் புதைந்து கிடக்கும் செல்வம் குறித்து மேலும் மகிழ்ச்சி தரும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

எண்ணெய் ஊற்றுக்கள்—தமிழ் நாடு, ஆந்திரம், திரு—கொச்சி மாநிலங்களிலும், அந்தமான் தீவுகளிலும் நிரம்ப இருக்கக்கூடுமென ரஷ்ய நிபுணர்கள் கருத்தறிவித்திருக்கின்றனராம்.

ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கும் ரஷ்ய நிபுணர்கள் தந்துள்ள இடைக்கால அறிக்கையில் இந்தக் கருத்து அறிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்த பகுதிகளிலன்றி அசாம், மேற்கு வங்கம், ஒரிசா, பஞ்சாப், இராஜஸ்தான் ஆகிய இடங்களிலும் இந்த எண்ணெய் ஊற்றுக்கள் இருக்கக்கூடுமென்றும் கூறப்படுகிறது.

இந்தத் தகவல்கள் மக்கள் சபை கேள்வி நேரத்தின்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'சென்னை மாநிலத்தில் மலபார் மாவட்டத்தில், தங்கம் கிடைக்கிறது.

என்று, வி பி நாயர் என்ற உறுப்பினர் ஒருவர் மக்கள் சபையில் தகவலளித்திருக்கிறார்.

1,880-ம் ஆண்டில், லண்டன் செய்திப் பத்திரிகைகள், மலபாரில் தங்கம் கிடைப்பதாக வும், இதனைத் தோண்டி

(4-ம் பக்கம் பார்க்க)

கூட்டணியின் மீது காமராசர் பாய்ச்சல்!

வாய் திறந்து வசைமாரி பொழிந்தாராம்!

கோழைகளாம்-குழப்பம் விளைவிப்பவர்களாம்!

உள்ளத்திலுள்ளதை வெளிப்படுத்த வெட்கப்படுபவர்களாம்!

'அரசியல் கட்சிகள்' எனக் கூறிக் கொள்ள அருகதை அற்றவர்களாம்!

சென்னை, மார்ச் 8—

சர்வகட்சிக் கூட்டணி மீது முதன் மந்திரி பாய்ந்திருக்கிறார்; கனம் காமராசர் வாய்திறந்து பேசியிருக்கிறார்; கூட்டணியின்மீது பெரும் தாக்குதல் நடத்துவதாக எண்ணிக்கொண்டு ஏதேதோ கூறியிருக்கிறார்.

மாணவர்கள் முன்னிலையில் பேசிய அவர், சர்வகட்சிக் கூட்டணியினரைக் கோழைகள்—குழப்பம் விளைவிப்பவர்கள்—உள்ளத்தில் பட்டதை எடுத்துரைக்கும் நெஞ்சு உரமில்லாதவர்கள்—என்றெல்லாம் ஏசியிருக்கிறார்.

'நுணலும் தன் வாயால் கெடும்' என்பதற்குக் காமராசர் இலக்கணமாகியிருக்கிறார்—என்று அவர் ஏசலைக் கேட்ட மாணவர்களில் சிலர் கூறுகின்றனர்.

காமராசர் 40 நிமிடங்கள் பேசினாராம்—பத்திரிகைகள் தெரிவிக்கின்றன!

கூட்டணி குறித்துக் கனம் காமராசர் உதிர்த்துள்ள கருத்துக்கள் என்னவெல்லாம் தெரியுமா?

"'கூட்டணி சேர்ந்தது தேர்தலில் போட்டியிடுவதற்காக அல்ல' என்று கூட்டணியில் உள்ள சிலர் கூறுகின்றனர்; இது எனக்குப் புரியவில்லை. 'காங்கிரசை முறியடிக்க எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டால்தான் முடியும்' என்று கூறுவார்களானால், என்னால் அவர்கள் விவாதத்தைப் புரிந்துகொள்ள முடியும்; ஆனால், இப்படி அவர்கள் பகிரங்கமாகச் சொல்வதற்குப் பயப்படுகிறார்கள்; ஏன் தெரியுமோ? 'காங்கிரசைக் காட்டிலும் நீங்கள் என்ன செய்துவிடப்போகிறீர்கள்?' என்று மக்கள் கேட்பார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான், 'கூட்டணி தேர்தலுக்குத்தான் என்று கூறப் பயப்படுகிறார்கள்' என்று ஆராய்ச்சியுரை வழங்கினாராம், காமராசர்!

"இந்திய யூனியனிலிருந்து பிரிந்துவிட வேண்டுமெனக் கோருபவர்கள்தான் பிப். 20ல் அர்த்தாலை நடத்தியிருக்கிறார்கள் என்று பிரதமர் நேரு அவர்கள் குறிப்பிட்டார். உடனே கூட்டணித் தலைவர், 'இந்திய யூனியனிலிருந்து பிரிந்துவிட வேண்டுமென்பதல்ல எங்கள் எண்ணம்' என்று அறிக்கை விடுத்தார்; ஆனால், நான் சொல்கிறேன்—கூட்டணியினரின் உண்மையான நோக்கமெல்லாம் இந்திய யூனியனிலிருந்து பிரிந்துவிட வேண்டுமென்பதுதான்; இதைப் பகிரங்கமாக அறிவிக்கமட்டுமே அவர்கள் பயப்படுகிறார்கள்; தங்கள் எண்ணங்களை வெளியில் சொல்ல வெட்கப்படுகிறார்கள்; தங்கள் எண்ணங்களை மக்களிடம் பகிரங்கமாகக் கூற வெட்கப்படும் இவர்கள், தங்களை அரசியல் கட்சியினர் என்று அழைத்துக்கொள்ளவே தகுதியில்லாதவர்கள்" என்று குட்டை குழப்பி, தான், தெரிந்ததைத் தெரியாதது என்றும், தெரியாததை தெரிந்தது என்றும் காட்டிக்கொள்ளும் போக்கினர் என்பதை வெளிக்காட்டியிருக்கிறார், காமராசர்!

'பிப்ரவரி 20-ல் பொது வேலை நிறுத்தமும், அர்த்தாலும் நடைபெற்றது; கடைகள் மூடப்பட்டன; சில கல்வி நிலையங்கள்கூட வழக்கம்போல வேலை செய்யவில்லை,' என்று உண்மையை ஓரளவுக்கு ஒப்புக்கொண்டுவிட்டு, அவர் மேலும் கூறினாராம்—'இந்தமாதிரி அர்த்தால் நடைபெறுவதற்கு ஏதாவது நியாயமுண்டா?' என்று கேட்டாராம், இந்த எல்லா நியாயங்களையும் உணர்ந்த 'நியாயவான்'!

"தமிழ் நாட்டிற்கு ஆபத்து வந்திருக்கிறது என்று கூட்டணியினர் கூறுகின்றனர்; ஆனால் எந்த ஆபத்தும் தமிழ் நாட்டை அச்சுறுத்துவதாக எனக்குத் தெரியவில்லை" என்று கூறினாராம் இந்த 'ஆபத்பாந்தவர்'!

'மாநிலங்களை இணைப்பது என்பது இன்னும் விவாதக் கட்டத்திலேயே இருக்கிறது; கூட்டணியினர் பயப்படுகிறமாதிரி ஒன்றும் இல்லை; ஏதாவது நிகழுமானால் அது மக்களின் விருப்பத்திற்கு ஒத்ததாகவே இருக்கும்' என்று கூறினாராம், இந்தப் 'புனிதமான ஜனநாயகவாதி!'

மேலும் கனம் காமராசர் கூறியவை என்ன என்ன என்பீர்?

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 8—3—'56 வியாழன்

நியாயத்திலும் நியாயம்

இந்தி மொழியை இந்தியப் பேரரசின் ஆட்சி மொழி என, இந்திய அரசியல் சட்டம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. அதன்படி இந்தியத் துணைக் கண்ட அரசாங்க ஊழியங்களுக்கு இந்தி மொழி அறிவு இன்றியமையாக் கட்டாயமாகிறது.

இந்தி மொழிக்கு ஏற்பட்டுள்ள புதிய அந்தஸ்தின் காரணமாக, இந்தி மொழியைக் கற்காதவர்களைக் காட்டிலும், இந்தி மொழியைக் கற்றுள்ளவர்களுக்கு, இந்தியப் பேரரசின் அரசாங்க அலுவல்களில் பணியாற்றுவதற்கு ஒரு புதிய சாதகம் ஏற்படுகிறது. இந்தி மொழியைக் கற்காதவர்களுக்கு, அதுவே ஒரு பெரிய பாதகமாகவும் முடிந்து விடுகிறது.

இந்தியப் பேரரசின் அரசாங்க அலுவலகங்களின் அளவுடன் மட்டுமே இந்தச் சாதகபாதகங்கள் நின்றுவிடக் கூடியது அல்ல. ஒரு மாகாணத்திற்கும், மற்றொரு மாகாணத்திற்கும் இருக்க வேண்டிய தொடர்புக்கும், இந்தியப் பேரரசிற்கும் ஒரு மாகாணத்திற்கும் இருக்க வேண்டிய தொடர்புக்கும், இந்திதான் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆட்சி மொழியாகும். எனவே, இந்தக் கட்டத்திலும், இந்தி கற்றவர்கள், அதைக் கற்காதவர்களைவிட முன்னேறுவது சாத்தியமாகிறது.

இந்தி மொழியை அனைவருமே ஒருசேரக் கற்று, அரசாங்கப் பணிகளில் போட்டியிடுவது எனும் நிலைமை இருக்குமானல், மேற்குறிப்பிட்ட சாதகபாதகமான விளைவுகளுக்கு ஒரு துளி இடமும் இருக்க முடியாது. அதுகண்டு இந்தி கற்காதவர்கள் எனப்படுவோர் அச்சப்பட வேண்டியதற்குரிய அவசியமே இருக்காது.

இந்தி மொழியைக் கற்றவர்—கற்காதவர் என்ற அளவுடன் மட்டுமே, இந்தப்பிரச்சினை முற்றுப் பெற்றுவிடவில்லை. இந்தி மொழியைப் பன்னெடுங்காலமாகத் தாய் மொழியாகக் கொண்டவர்கள், அஃதில்லாதவர்கள் என இரு பிரிவில் சேர்த்துக் கருதப்பட வேண்டியவர்களாக இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் உள்ளனர். இந்த அடிப்படை வேற்றுமையின் காரணமாக, இந்தி மொழியில் செயல் திறம் பெறுவது இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு மிகமிக எளிதில் சாத்தியமாகக்கூடியதாகும். ஆனல், இந்தியை என்றும் கேள்விப்படாதவர்களுக்கோ, அச்செயல் திறம் பெறுவதோ என்றைக்கும் இயலாததாகும். பல ஆண்டுக்காலம் கழித்து இயலுவதானுலும், அப்பயிற்சி குறைபாடு உடையதாகவே இருக்கக் கூடும்.

தகுதி — திறமை என்ற ஒன்றை மட்டுமே மூல மதிப்பீடாகக்கொண்டு அரசாங்க அலுவல்களுக்கு, இந்தி மொழியில் பயிற்சி பெற்ற அதிகாரிகளை பொறுக்கி எடுப்பதாக இருந்தால், நிச்சயமாக நூற்றுக்கு நூறு பங்கும் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களே வெற்றி பெறுவர். மற்றவர்களுக்கு முழுத் தோல்வி தான் நிச்சயமாகும்.

இது விரும்பத்தகாத நிலை. இந்த விபரீதம் செயலாற்றப்படுவதை நியாயபுத்தி படைத்த எவரும் எதிர்க்கவே செய்வர்.

இதன் விளைவாக, இந்தி மொழி வழங்கும் மாகாணங்கள், இந்தியை அறியாத மாகாணங்கள் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடிய ஒரு அவல நிலை ஏற்படுவதும் திண்ணம். அந்த ஆதிக்கம், ஆட்சித்துறையோடு கட்டுப்பட்டுவிடக் கூடியதன்று. வாழ்க்கைத் துறைகள் அனைத்திலும் அதன் விபரீத விளைவு பிரதிபலிக்கத்தான் செய்யும்.

இந்தி மொழித் திணிப்பால் ஏற்படுகின்ற விபரீத விளைவுகளிலிருந்து, இந்தி மொழி வழங்கப்படாத மாகாணத்தவர்களைக் காப்பாற்ற வேண்டியது நியாயமுமாகிறது, கட்டாயமுமாகிறது. அதற்காகத் தீவிரமான பாதுகாப்பை சட்டப்படி இந்தி மொழி வழங்கப் பெறாத மாகாணத்தவர்களுக்குத் தந்தாக வேண்டும். அப்பொழுதுதான் இந்தி மொழி வழங்கும் மாகாணத்தவர், அது வழங்கப் பெறாத மாகாணத்தவர்மீது, இந்தி மொழியின் துணை கொண்டு செய்யக்கூடிய ஆதிக்கத்தை ஓரளவிற்காவது தடுத்து நிறுத்த முடியும்.

அந்நிலையில் தகுதி—திறமை ஆகிய இரண்டை மட்டுமே மூலக் கோட்பாடாகக் கொண்டு அரசாங்க ஊழியங்களுக்கு ஆட்களைப் பொறுக்கி எடுக்க முடியாது. ஊழியர்களாகத் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவர்களின் பிறந்துள்ளப் பகுதிகளுக்கே முக்கியத்துவம் காட்டப்பட வேண்டும். அந்நிலையில் தகுதியும், திறமையும ஒதுக்கித்தள்ள வேண்டிய ஒரு விஷயமாகிவிடும்.

இந்த நியாயத்தைத்தான், இந்தி வெறியர்களுக்கு இந்தி அறவே வழங்கப்பெறாத் தென்னுட்டவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். அதற்காக அன்பர் ஆச்சாரியார் முதல், சாதாரண அரசியல் வாதிகள் வரை வாதாடியும் வருகின்றனர்.

அவர்கள் கோரிக்கை நியாயமானது. அவர்கள் அச்சம் பிரத்தியட்ச உண்மை. அந்தக் கேடுகள் விளையாமல் இருக்க, தென்னுட்டிற்குச் சலுகை காட்ட வேண்டியது நியாயத்திலும் நியாயமாகும்.

பள்ளிக்கூட சுகாதார சர்வீசுகளுக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ரூ. 1,26,00,000 ஒதுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அவற்றின் கீழ் மொத்தம் சுமார் 4 25 000 சிறுவர்கள் பயன் பெறுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த சர்வீசில் வைத்தியப் பரீட்சை, சிறு நோய்நொடிகளுக்கான சிகிச்சை, சுகாதாரக் கல்வி ஆகியவை இடம்பெறும்

வட நாட்டில் இரயில்வே அபிவிருத்தி

கிடைத்துள்ள சில விபரங்கள்

இரயில்வே இலாகாவின் சரித்திரத்திலேயே இதுவரை இல்லாத அளவுபெரியதோர்தொகை சுமார் ரூ. 29 கோடி செலவில் கல்கத்தா சீல்டா இரயில்நிலைய அபிவிருத்திக்குத் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

இந்த ஆண்டில் (1956-57-ல்) ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாயும், இரண்டாம் திட்ட முடிவு காலத்தில் ரூ. 28,76,00,000 செலவு செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது.

சீல்டா வட்டத்தில் இரயில் போக்குவரத்தை மின்சார மயமாக்குவது, ஹௌரா—பர்த்துவான் குறுக்குவழி இரயில் பாதையையும் மின்சார மயமாக்குவது என்பதே திட்டமாம்.

தென் கிழக்கு இரயில்வேயில் ரூர்கேலா, பிலாய் உருக்குச்சாலைகளுக்கும், டாடா தொழிற்சாலைக்கும் போக்குவரத்திற்கு உதவக்கூடிய வகையில் மூன்று புதிய இரயில் பாதைகள் அமையவிருக்கின்றன.

பாராசெத்-பசீர்ஹாத் என்ற கல்கத்தாவிற்கருகில் உள்ள பகுதிகளிலிருக்கும் புதிய இரயில் பாதை அமைப்பு வேலை இந்த ஆண்டுமுதல் துவங்குமாம். இதற்காக ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

கிழக்கு-தென் கிழக்கு இரயில்வேக்களில், நிலக்கரிப் போக்குவரத்திற்கு உபயோகப்படக் கூடிய வகையில் புதிய பாதைகள் அமைக்கவும் சுமார் 25 இலட்சம் ரூபாய் தரப்படுகிறதாம்!

கலப்படத்தைக் கண்டுபிடிக்க வழி

காபிப் பொடியில் கலப்படம் இருப்பதைக் கண்டு பிடிக்க சுலபமானதோர் வழிகண்டு பிடிக்கப்பட்டுள்ளதாம்.

புளியங்கொட்டை, பேரிச்சைக் கொட்டைத் தூள்கள்தான் அதிகமாகக் காப்பிப் பொடியுடன் கலக்கப்படுகின்றனவாம்.

இதைக் கண்டு பிடிக்க மைசூரில் உள்ள உணவு ஆராய்ச்சிக் கழகம் வழிகண்டுள்ளதாம்.

காபி டிகாஷன்' இறக்கியதும், கீழ்ப்படியும் வண்டலை ஒரு காகிதத்தில் பரப்பி ஒரு சில துளி 'காஸ்டிக் சோடா'வைச் சேர்க்க வேண்டும். கலப்பில்லாததாயிருந்தால், வண்டலின் நிறம் மாறுது என்றும், கலப்படமான பொடியானல் வண்டல் நிறம் கரும் ஊதாவாகமாறும் என்றும், இதனல் இந்தச் சோதனையை வீட்டிலேயே நடத்தலாம் என்றும் தெரியவருகிறது.

இந்தியாவில் நூல் உற்பத்தி 1954-ல் 156 கோடி 10 இலட்சம் பவுண்டாக இருந்துவந்தது; அது, 1955-ல் 162 கோடி 15 இலட்சம் பவுண்டாக உயர்ந்துவிட்டது.

ஸ்டாலின்மீது வசைமாரி!

ரஷ்யத் தலைவர்களுடன் சேர்ந்து கிழக்கு ஜெர்மன் தலைவரும் 'கோரஸ்'

மார்க்சீய தத்துவாசிரியர்களுடன் ஸ்டாலின் ஒப்பிடப்பட முடியாதவர் என்று ஒரு காலத்தில் ஸ்டாலினைக் குருவாக ஏற்றுக்கொண்டிருந்த கம்யூனிஸ்டுத் தலைவர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறர்.

அண்மையில் ரஷ்யாவில் நடைபெற்ற சோவியத் கம்யூனிஸ்டுகட்சி மாநாட்டில் சோவியத் தலைவர்கள் ஸ்டாலின் மீது வசைபுராணம் பாடியது நினைவிலிருக்கலாம்

இப்போது ரஷ்யாவைச் சேராத வேறொரு நாட்டு கம்யூனிஸ்டுத தலைவர் 'தாக்குதல்' துவங்கியிருக்கிறர்.

ஜெர்மானிய கம்யூனிஸ்டுத் தலைவரான ஹெர் வால்டர் அல்பிரிச்ட் தான் ஸ்டாலினை வசைபாடப் புறப்பட்டிருக்கும் தலைவர்

இவர் கிழக்கு ஜெர்மன் நாட்டின் முதல் உதவிப் பிரதமராக விருக்கிறர்.

இவர், கிழக்கு ஜெர்மன் பிரதிநிதி குழுவுக்குத் தலைவராக ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சி மாநாட்டிற்குச் சென்றிருந்தார்.

கம்யூனிஸ்டு கட்சியின் வளர்ச்சிக்கும், ரஷ்ய நாட்டின் முன்னேற்றத்திற்கும் ஸ்டாலின் பெரும் தீங்குகளை விளைவித்ததாகவும்; கட்சிக்கும் மேலாகத் தன்னை எண்ணிக்கொண்டிருந்ததாயும் குற்றம் சாட்டியிருக்கிறர்.

ஸ்டாலின் எழுதிய புத்தகம் ஒன்றில் அவர் தன்னைத் தானே புகழ்ந்து கொண்டிருப்பதாயும், ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சி வரலாற்றைச் சிதைத்திருப்பதாகவும் கூட இவர் குற்றம் சாட்டுகிருராம்.

இந்தக் கருத்துக்களை கிழக்கு ஜெர்மன் பத்திரிகை ஒன்றில் இவர் வெளியிட்டிருப்பதாக பெர்லின் செய்தி ஒன்று கூறுகிறது.

மாலங்காவ்: பிரிட்டன் செல்கிறர்

சோவியத் ரஷ்யாவின் முன்னுள் பிரதமர் மாலங்காவ், மார்ச் 15-ந் தேதியை ஒட்டி பிரிட்டனுக்கு வருவார் என்று லண்டன் செய்தி ஒன்று கூறுகிறது.

மாலங்காவ் இப்போது உதவிப் பிரதம மந்திரியாகவும், மின்சார நிலையங்களின் நிர்வாக மந்திரியாகவும் இருந்து வருகிறர். அவர், பிரிட்டிஷ் மின்சார நிலையங்களைப் பார்வையிடுவதற்காக இங்கிலாந்துக்கு வரும் ரஷ்யத் தூதுக் குழு ஒன்றிற்குத் தலைமை தாங்குவார் என்று கூறப்படுகிறது

பிரிட்டனுக்கு, மார்ஷல் புல்கானின், குருஷ்சேவ் ஆகிய இருவரும் ஏப்ரல் 18-ந் தேதியன்று வரவிருப்பதாயும், ஒருவார காலம் அவர்கள் பிரிட்டனிலிருப்பர் என்றும் தெரியவருகிறது.

மற்றும் ஒரு கும்பமேளா!

ரூ. 26-இலட்சம் செலவிடப்படும்

வரும் ஏப்ரல் திங்களில் அரித்துவாரத்தில் கும்பமேளா ஒன்று நடைபெறுவதாயும், அதில் சுமார் 12 இலட்சம் யாத்திரீகர்கள்கலந்துகொள்வர் என்று எதிர்பார்க்கப்படுவதாயும், இந்த விழாவிற்காக மாநில சர்க்கார் 26 இலட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிட்டிருப்பதாயும் ஒரு செய்தி கூறுகிறது.

இந்தியாவில் உள்ள வெளிநாட்டு இன்ஷ்யூர் நிறுவனங்கள்

இந்தியாவில் 107 அன்னிய நிறுவனங்கள் இன்ஷ்யூரன்ஸ் தொழிலில் ஈடுபட்டிருப்பதாகவும், வெளிநாடுகளில் 88 இந்திய நிறுவனங்கள் தொழில் நடத்துவதாகவும், ரெவினியூ மந்திரி எம். சி. ஷா, மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறர்.

அன்னிய நிறுவனங்களுக்கு எவ்வித சலுகையும் தரப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில், ஆண்டிற்குச் சுமார் ரூ. 800 கோடி மதிப்புள்ள பாலும், பால் பொருள்களும் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இந்திய 'சாதுக்'கள்

'பாகிஸ்தானுக்குப் போய்விட்டனரா?'

பிரதமர் நேரு கேள்வி

'இந்தியாவிலிருந்து பல சாதுக்கள் பாகிஸ்தானுக்குக் குடியேறிவிட்டார்களா என்ன?' என்று நேரு பண்டிதர் கேட்டாராம்!

சுபாஷ் நகரில், பாரத் சேவா சமாஜத்தின் நாலாவது மாநாட்டில் பேசுகையில், அவர், புதிதாகத் துவக்கப்பட்டுள்ள 'சாதுக்கள் சமாஜ்' பற்றி குறிப்பிடுகையில், இந்தியாவில் 60 இலட்சம் 'சாது'க்கள் இருப்பதாகக் கூறியிருக்கிறர்.

துக்தோஜி மகராஜ் என்ற 'சாது சமாஜ'த் தலைவர், உடனே இந்தியாவில் 10 முதல் 20 இலட்சம் வரைதான் சாதுக்கள் இருக்க முடியும்' என்று தெரிவித்திருக்கிறர்.

உடனே நேரு பண்டிதர், 'என்ன, சாதுக்கள் எல்லாம் பாகிஸ்தானுக்கா போய்விட்டார்கள்?' என்று கேட்டாராம்!

நேருவின் கார்முன் படுத்த கிராமவாசி

நிசாமாபாத், மார்ச். 6—

ஆச்சாரியா வினேபா பாவேயைச் சந்திப்பதற்காகப் பிரதமர் நேரு இன்று காரில் போய்க்கொண்டிருக்கையில், ஒரு கிராமவாசி நேருவின் கார்முன் நீட்டி நிமிர்ந்து படுத்துவிட்டாராம். கார் அவர் மேல் ஏறிவிடாமல் தடுத்து நிறுத்தினராம், கார் ஓட்டி. நேருவுடன் வந்த போலீசார் அந்தக் கிராமவாசியைக் கைது செய்தார்களாம்.

நேரு கிராமவாசியை விடுவிக்குமாறு சொன்னராம். விடுதலை அடைந்த அந்தக் கிராமவாசி, மகிழ்ச்சியுடன் மக்கள் கூட்டத்தினுள் ஓடிமறைந்தாராம்.

அந்தக் கிராமவாசி, போலீசாரை ஏமாற்றிவிட்டுப் பிரதமரிடம் ஒரு மனுவைத் தந்துவிட்டு மக்கள் கூட்டத்துலை ஓடி மறைந்ததாக வேறொரு செய்தி கூறுகிறது.

சர்க்காருக்கு எதிராக தாழ்த்தப்பட்டோர் நேரடி நடவடிக்கை

"தாழ்த்தப்பட்டோருக்குச் சொந்தமான நிலங்களை சர்க்கார் பறிமுதல் செய்வார்களேயானல் சர்க்காருக்கு எதிராக நேரடி நடவடிக்கை எடுக்கப்படும்,"

என்று பம்பாய் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் தெரிவித்திருக்கிறது.

நாசிக் நகரில் இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் சுமார் 3,000 தாழ்த்தப்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். அங்கு இத்தகவல் அறிவிக்கப்பட்டது; நேரடி நடவடிக்கை பற்றி விவாதிக்கப்பட்டது.

தோழர் கம்ளி என்ற சட்டசபை உறுப்பினர், கூட்டத்தில் பேசுகையில், நிலங்களைப் பறிமுதல் செய்யமாட்டோமென சர்க்கார் உறுதி தந்திருப்பதாயும், உறுதிமொழி காப்பாற்றப்படா விட்டால் நேரடி நடவடிக்கை எடுக்கவேண்டி வரும் என்றும் தெரிவித்தார்.

செய்திச் சுருள்

விருதுநகர் வள்ளுவர் சொற் பயிற்சி மன்றம்

22—1—56-ல் மன்றத் துவக்க விழா, தோழர் நா. சந்தானம் தலைமையில் நடைபெற்றது. மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 29—1—56-ல் மன்ற முதல் விவாத அரங்கு தோழர் டி என் கிருபேந்திரபாபு தலைமையிலும், 5—2—56-ல் இரண்டாம் விவாத அரங்கு தோழர் அய்யம்பெருமாள் தலைமையிலும், மூன்றுவது விவாத அரங்கு தோழர் பு. இராசதுரை தலைமையிலும், நான்காவது விவாத அரங்கு தோழர் வி மரிய அந்தோணி தலைமையிலுல் சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொரு விவாதத்தின்போதும் தோழர்கள் பலர் பல்வேறு தலைப்புகளில் பேசினர்.

சென்னை அறிவியக்க மன்றம்

26—2—56 காலை 10½ மணிக்கு தோழர் வெங்கடேசன் தலைமையில் நடைபெற்ற மேற்படி மன்ற உறுப்பினர் கூட்டத்தில், ஏப்ரல் திங்கள் இறுதிக்குள் பொதுக்கூட்டம் நடத்துவதெனவும், மன்றத் தலைவரின் விலகுதலை ஒப்புக் கொண்டும், மற்றும் சில முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சென்னை வள்ளுவர் மன்றம்

11—2—56-ல், சென்னை—வரதராசபுரம் வள்ளுவர் மன்றச் செயற் குழு உறுப்பினர் தேர்தல் நடைபெற்றது. தோழர் ஆர். பட்டாபிராமனைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

கரூரில் அண்ணா அறிவு வளர்ச்சி மன்றம்

3-3-56 மாலை 4 மணிக்கு கருணாநிதி கலைமன்றத்தில் கரூர் தி. மு கழகத் தோழர்களால், அண்ணா அறிவு வளர்ச்சி மன்ற அமைப்புக் கூட்டம் தோழர் நாவரசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் மு. பெருமாள் அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

சங்கரநயினார்கோயில் மறுமலர்ச்சி நாடக மன்றம்

10—2—56 மாலை 3 மணிக்கு மறுமலர்ச்சி நாடக மன்ற புதிய செயற் குழு அமைப்புக் கூட்டம் மன்ற அலுவலகத்தில் தோழர் ச. ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. இரா. பழனிவேலு அவர்களைச் செயலாளராகக் கொண்ட ஒரு செயற் குழு அமைக்கப்பட்டது.

மதுரை இளங்கோ மன்றம்

4—2—56 இரவு 10 மணிக்கு, மதுரை பாண்டிய வேளாளர் தெருவிலுள்ள இளங்கோ மன்ற உறுப்பினர் கூட்டம் தோழர் மு. சந்தானம் தலைமையில் நடைபெற்றபோது, வரவு - செலவுத் தணிக்கை செய்யப்பட்டும், புதிய பொருளாளராகத் தோழர் அ. குருசாமி அவர்களைத் தேர்ந்தெடுத்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன

பாண்டியனார் நினைவு நாள்

22—2—56 மாலை 7 மணிக்கு, தாராவி - பம்பாய் சௌந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றச் சார்பில், 'அன்பக'த்தில், பாண்டியனார் நினைவு நாள் கூட்டம் தோழர் பி. சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டி. வி துரை, நாஞ்சில் ஜி இராசாமணி. மா. இரா. வ ரெத்தினசாமி, மா. இரா. குறள்தாசன், ஊ ஆ. செல்லையா ஆகியோர் பாண்டியனாரின் சேவைக் குறித்துப் பேசினர்.

சென்னை—வண்ணை தமிழ் இளைஞர் கழகம்

4—2—56 மாலை கழக நிலையத்தில், உறுப்பினர் கூட்டம் தோழர் தி. வே. சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றபோது முக்கியத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

11—2—56 மாலை கழக நிலையத்தில் தோழர் தி. வே. சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில், இவ்வாண்டுக்குரிய செயற் குழு அமைக்கப்பட்டது.

கொம்பன்குளம் கிராம முன்னேற்றக் கழகம்

5—2—56-ல், மேற்படி கழகத்தின் இலக்கைக் கிளையின் 3-ம் ஆண்டு நிறைவு விழா செம்பட்டாத் தெரு, எண் 140 கட்டிடத்தில் திரு. கி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது. தோழர்கள் எல். தர்மதாசன், பி. எம். ஜலால், அ. கா. சுந்தரராசன், தி. இளங்கதிர், ஆர். ஆர். கே. டேலர், வி. எஸ். முருகன் ஆகியோர் பேசினர். இறுதியில் முக்கியத் தீர்மானங்கள் சில மேற்கொள்ளப்பட்டன.

கும்பகோணம் கலைக் கழகம்

1—3—56 மாலை 5-30 மணிக்கு டி கே எஸ். சகோதரர்களுக்கு தோழர் பி. டி. சண்முகம் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது டி கே. எஸ். சகோதரர்களைப் பாராட்டி தோழர்கள் பி. சண்முகம், எஸ். கணபதி, என். எஸ் வாசன் ஆகியோர் பேசினர்.

பொன்மலை திருக்குறள் கழகம்

5—2—56 மாலை 6-30 மணிக்கு கழகச் சிறப்புக் கூட்டம் இரயில்வே படிப்பக மன்றத்தில் நடைபெற்றபோது, தோழர் வி. அ. பரிமேலழகர் 'வள்ளுவர் வாய்மொழி' என்னும் பொருள் பற்றியும், தோழர் சா. இராமலிங்கம் 'திருக்குறளும்-கல்வியும்' என்னும் பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

மாயூரம் இளங்கோ மன்றம்

14—1—56 அன்று மாயூரம் இளங்கோ மன்றச் சார்பில், பொங்கல் விழா கொண்டாடப்பட்டது தோழர்கள் என். கிட்டப்பா, வி. சங்கையன், அனந்த பத்மநாதன் ஆகியோர் பேசினர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

திருமயத்தில் பொங்கல் விழா

28—2—56ல், திருமயத்தில், தோழர் சி. நா. நாகலிங்கம் தலைமையில் பொங்கல் விழா நடைபெற்றது. தோழர் க. அன்பழகன் பொங்கல் விழா பற்றி. விளக்க உரையாற்றினர்.

மதுரை பகுத்தறிவுப் படிப்பகம் துவக்கம்

5—2—56 காலை 10 மணிக்கு, தோழர் எ. இராமானுசம் தலைமையில் நடைபெற்றது. தோழர் பி. அறிவழகன் படிப்பகத்தைத் திறந்து வைத்தார்; மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் எஸ். முத்து கொடியேற்றி வைத்துப் பேசினர். தோழர்கள் பலர் கருத்துரை ஆற்றினர். பின்னர், செயலாளராக எ. இராமானுசம்; துணைச் செயலாளராக ஆர். எஸ். இராசனும்; பொருளாளராக ப. அழகரும் விளம்பரச் செயலாளராக சி. அருணாசலமும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் 11 பேர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அரங்கண்ணல்

சுற்றுப்பயணம்

26—2—56 இரவு 8 மணிக்கு சங்கரநயினார்கோவில் நகர் தி. மு கழகச் சார்பில், நகர் காந்தி திடலில், தோழர் பரமசிவம் பண்பாடா தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சு. பழனியப்பன், ஆர். பழனிவேலு சிறிது நேரம் பேசியபின், எட்டயபுரம் நெசவாளர் சங்கச் செயலாளர் எஸ். கலிங்கன் 'நெசவாளர் நிலையும், ரிபேட் முறையும்' பற்றி பேசினர்.

பின்னர், தோழர் இராம-அரங்கண்ணல் அவர்கள், 'பிப். 20—பொதுவேலை நிறுத்தம் ஏன் நடைபெற்றது? இனி அரசாங்கம் செய்யவேண்டியது என்ன?' என்பது பற்றிப் பேசினர்.

தலைவர் முடிவுரையில் பிப். 20—அர்த்தாலுக்கு முழு ஆதரவு கொடுத்த பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும் குறிப்பாக நெசவாளர்கள் அனைவருக்கும் மற்ற தொழிலாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

* * *

சேவல்குளம் பகுத்தறிவு மன்றம் துவக்க விழா

27—2—56 இரவு 9-10 மணிக்கு, சங்கரன் கோவிலிலிருந்து சேவல் குளம் வந்து சேர்ந்தார்.

தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் சேவல்குளம் பகுத்தறிவு மன்றத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் அரங்கண்ணல் அவர்கள் 'பகுத்தறிவும் தி. மு. கழகமும்' என்பதுபற்றி சுமார் ஒரு மணி நேரம் விளக்கவுரை ஆற்றினர்.

சேவல்குளம் இதுவரை நமது கூட்டம் நடைபெறாத இடம் என்றாலும், கூட்டத்திற்கு ஏராளமான ஆண்களும், பெண்களும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சென்னை—திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகம்

12-1-56ல் நடைபெற்ற செயற் குழுத் தீர்மானப்படி தோழர்கள் கா. அப்பாதுரையார், கண்ணதாசன், கே. எஸ். அருணாசலம், அரங்கநாதம், சண்பகவேல் ஆகியோரடங்கிய நிரந்தர சொத்துப் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டது.

இரா. நெடுஞ்செழியனார் படிப்பகம்

5—2—56 இரவு 7 மணிக்கு கொப்பம்பட்டி தேர் நிறுத்தத் திடலில், இரா. நெடுஞ்செழியனார் படிப்பக முதலாவது ஆண்டு விழா தோழர் என். அரங்கசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அன்புமணி, சிவப்பிரகாசம், பா. அரங்கசாமி எம்.எல்.எ, அறிவுடைநம்பி, க. அன்பழகன் ஆகியோர் பேசினர்.

இரவு 10-30 மணிக்குக் கொப்பம்பட்டி பாரதிதாசன் நாடக மன்றத்தின் சார்பில், 'அம்பிகாபதி' எனும் நாடகம் நடைபெற்றது.

மேலப்புதூர் தி. மு. கழக படிப்பகம்

12—2—56 காலை 10½ மணிக்கு மேற்படியூர் தி. மு. கழக படிப்பக உறுப்பினர் கூட்டம் தோழர் எம். நவநீதம் தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் திருச்சி தாசன், மணிமாறன், எம். நவநீதம் ஆகியோரிடம் படிப்பக நிர்வாகத்தை ஒப்புவித்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

வெள்ளூர் நண்பர்கள் படிப்பகம்

7—2—56 இரவு 8 மணியளவில் தோழர் சு. இராமச்சந்திரன் தலைமையில், படிப்பகச் செயற் குழுக் கூட்டம் நடைபெற்றது. வரவு—செலவு கணக்குகள் சரி பார்க்கப்பட்டு, முடிவுகள் பல மேற்கொள்ளப்பட்டன.

சென்னை மாநில முடி திருத்தும் தொழிலாளர் சங்கம்

7—2—56 பகல் 11 மணிக்கு, மேற்படி சங்கச் செயற் குழுக் கூட்டம் திரு. எஸ். வெங்கட்ராமன் தலைமையில் நடைபெற்றபோது, சங்கத்திற்கென தனி முடி திருத்தும் கடை ஒன்று ஆரம்பிப்பதென்றும், மற்றும் பல முக்கியத் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

பாண்டியமண்டல உழவர் சங்கம்

6—2—56 இரவு 8 மணிக்கு நாட்டார்மங்கலம் கிளைச் சங்க அமைப்புக் கூட்டம் தோழர் எ. ஆர். நாதன், இல்லத்தில் தோழர் கா. முகம்மதலி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தலைவராக சா. வீ. ஆண்டி அவர்களையும், செயலாளராக அ. ராமநாதன் அவர்களையும் கொண்ட செயற் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

பெரம்பூர் வியாபாரிகள் ஐக்கிய சங்கம்

27—2—56 இரவு 8 மணிக்கு, சென்னை—பெரம்பூர் வியாபாரிகள் ஐக்கிய சங்க ஆண்டு விழா தோழர் டி. ஆண்டியப்ப (நாடார்) தலைமையில் நடைபெற்றது. ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்ட பின் தோழர் எஸ். பி. கிருஷ்ணசாமியை தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

விருதுநகர் தென் பகுதி இரயில்வே யூனியன்

2—2—56 மாலை 4-30 மணிக்கு, விருதையில், கிளையின் செயற் குழுக் கூட்டம் எஸ். ஈ. பொன்னையா தலைமையில் கூடியது. தோழர் எம். ஜி. பிரகாசம், கிளையின் சேவையை விளக்கிப் பேசினார். பின்னர் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தென் பகுதி இரயில்வே யூனியன்—லால்குடி கிளை

11—2—56 மாலை 6 மணிக்கு லால்குடி பெரியசெட்டித் தெரு, எண் 42 இல்லத்தில் செயற் குழுக் கூட்டம் தோழர் ப. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் ஆர். சிவப்பிரகாசம், குஞ்சிதபாதம், கல்யாணசுந்தரம், பொன். பரமசிவம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

சிதம்பரம் வட்டம் தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன்

5—2—56ல், தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் குழுக் கூட்டம் தோழர் சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் எம். செல்லையாவைத் தலைவராகக் கொண்ட ஓர் பிரச்சாரக் குழு நியமிக்கப்பட்டு, தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

முற்போக்கு நாடக மன்றம் அமைப்பு

2—2—56 இரவு 10 மணிக்கு முத்தப்பேட்டை சந்திரா போட்டோ ஸ்டுடியோ தோழர் ந. தருமலிங்கம் தலைமையில், முற்போக்கு நாடக மன்றம் அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது மன்ற நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், புயல் நிவாரண நிதிக்கென நாடகம் ஒன்று நடிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

'உறுதி மொழி' — நாடகம்

4—2—56 இரவு 10 மணிக்கு மேலப்பரமக்குடி பாரதிதாசன் படிப்பகத்தாரால், தோழர் ஆர். எஸ். பிரகாசம் தலைமையில், 'உறுதி மொழி' என்ற நாடகம் நடைபெற்றது.

'ஆகாய இரயில்'

மணிக்கு 100 மைல் ஓட்டம்

பென்சில்வேனியா இரயில்வே கம்பெனியின் பரீட்சார்த்த 'ஆகாய இரயில் வண்டி' நியூயார்க் நகரத்திலிருந்து பிட்ஸ்பர்க்குக்கு ஓடிய ஒழுங்கான முதல் ஓட்டத்தில் மணிக்கு 100 மைல் வேகத்தை எட்டிப்பிடித்து விட்டதாம். 'காலைய இரயில் வண்டி' என்பது அதன் பெயர். ஒன்பது பெட்டிக்குள்ள எடை குறைந்த இந்த இரயில் வண்டி 439 மைல் பிரயாணத்தை 7½ மணிக்குள் முடிக்[illegible]வண்டும் என்பது ஏற்பாடு.

அந்த ஏற்பாட்டுக்கு 2 நிமிடத்துக்கு முந்தியே அந்தப் பிரயாணத்தை அது முடித்துவிட்டது. அதற்கு அரை மணி நேரத்துக்குப் பின் அது நியூயார்க் திரும்பியது. நியூயார்க்குக்கும் — பிட்ஸ்பர்க்குக்கும் இடையில் அது ஒன்பது இடங்களில் நின்றது.

கல்வி பற்றி

வெள்ளை அறிக்கையாம்!

கல்வி பற்றிய வெள்ளை அறிக்கையை சென்னை சட்டசபை மார்ச் 29-ந் தேதிக்குப் பிறகு விவாதிக்குமாம். இரண்டாவது திட்டமும், மாநிலப் புதுஅமைப்பு மசோதாவும் மார்ச் திங்கள் 29-ந் தேதிக்குப் பிறகுதான் விவாதத்திற்கு வருமெனத் தெரிகிறது.

அன்பளிப்பு

24-2-56ல், மதுரை தமிழ்ச் செல்வி அரங்கம் உரிமையாளர் திரு பி. எல். கலைத்துறைவன்—செல்வா அவர்களால் 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 3 நன்கொடையாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

ஃ ஃ ஃ

சேலம் மாவட்டம் குட்டரங்கம் பட்டியில் தி. மு. க. கிளை துவக்கியதின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம்— நன்றி-பொறுப்பாளர்.

அயன்புரம் பாரதிதாசன் நூல் நிலையம்

5—2—56ல் நடைபெற்ற சென்னை — அயன்புரம் பாரதிதாசன் நூல் நிலைய பொது உறுப்பினர் கூட்டத்தில், ஏப்ரல் மாதத்தில் பாரதிதாசன் பிறந்த தின விழாவும், நூல் நிலைய ஆண்டு விழாவும் கொண்டாடுவதெனவும் முடிவு செய்து, தோழர் வை. நரசிம்மன் அவர்களை செயலாளராகக் கொண்ட செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயங்கொண்டம் நூல் நிலைய சிறப்புக் கூட்டம்

1—3—56 மாலை 3 மணிக்கு, திருச்சி மத்திய நூல் நிலையக் கட்டிடத்தில் தோழர் எம். பி. நடராசன் தலைமையில் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. மாவட்டக் கல்வி அதிகாரி தோழர் ஜி. வேதக்கண் அவர்கள் நூல் நிலையம் பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை விளக்கிப் பேசினார். அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.

சௌந்திரபாண்டியனார் 3-ம் ஆண்டு நினைவு விழா

22—2—56ல், மறைந்த மாவீரர் சௌந்திரபாண்டியன் அவர்களின் மூன்றும் ஆண்டு விழா, பட்டிவீரன்பட்டியில் தோழர் சு. மீனாட்சி சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. நடராசன், அ. பொன்னம்பலனார், சையத் இப்ராஹீம், எ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் பேசினர்.

கூட்டத்திற்கு முன்பு அலங்கரிக்கப்பட்ட பாண்டியனார் படத்துடன் கொண்ட சைக்கிள் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு, பாண்டியனார் திடலில் முடிவுற்றது.

காஷ்மீர் சிக்கல் :

பாகிஸ்தான் கொள்கைக்கு மேற்கு வல்லரசுகள் ஆதரவு

'சீட்டோ' கூட்டத்தில் அறிவிப்பு

பக்தூனிஸ்தானுக்கு எதிராகவும் கருத்தறிவிப்பாம்.

கராச்சி, மார்ச் 7—

'காஷ்மீர் இந்தியாவுடன் இணைவதா, அல்லது பாகிஸ்தானுடன் இணைவதா' என்பதை நிர்ணயிக்க காஷ்மீர் மக்களிடை வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்ற பாகிஸ்தானின் கொள்கைக்கு, 'சீட்டோ' கவுன்சில் கூட்டத்தில் ஆதரவு அளிக்கப்பட்டிருக்கிறது.

ஐ. நா. பாதுகாப்பு சபை இது குறித்து நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை அமுல் செய்யவேண்டும் என்ற பாகிஸ்தான் கோரிக்கைக்கு 'சீட்டோ' நாடுகள் ஆதரவு அளித்துள்ளன என்று தெரியவருகிறது.

'சீட்டோ' பிரதேசத்தில் சமாதானத்திற்குத் தோன்றியுள்ள ஆபத்தைத் தவிர்ப்பதற்குக் காஷ்மீர் பற்றிய ஐ. நா. தீர்மானத்தை அமுல் செய்யுமாறு பாதுகாப்புச் சபையில் வற்புறுத்தவேண்டுவது அவசியம் என்று பேசப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

காஷ்மீர் விவகாரத்தின் சாதக பாதகங்கள் கூட்டத்தில் விவாதிக்கப்படவில்லையாம்,

பாகிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தூதுவர் ஹில்ட்ரெத் பாகிஸ்தானுக்கு ஆதரவு தரவேண்டுமென்று கூறியதைத் தொடர்ந்து இதர நாட்டுப் பிரதிநிதிகளும் தங்கள் ஆதரவைத் தந்ததாகவும் கூறப்படுகிறது.

ஆப்கனிஸ்தானிற்கும் — பாகிஸ்தானிற்குமிடையில், பக்தூனிஸ்தான் அமைப்பது சம்மந்தமாக இருந்துவரும் தகராறில், பாகிஸ்தானின் எல்லையாக 'டூராண்ட்' கோடுதான் இருக்கவேண்டும் என்ற பாகிஸ்தானின் கருத்திற்கும், 'சீட்டோ' கூட்டத்தில் ஆதரவு தரப்பட்டதாம்.

'டூராண்டு' எல்லைக்கோட்டைத்தான் ஆப்கனிஸ்தானையும்—பாகிஸ்தானையும் பிரித்துக்காட்டும் எல்லையாக 'சீட்டோ' கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'காஷ்மீர் பற்றிப் பேசுவதற்கு 'சீட்டோ' உரிய இடமல்ல' என்று, பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி லாயிட் நேற்றைக்கு முன்தினம் தெரிவித்திருந்தார்.

கடந்த டிசம்பர் திங்களில், இந்தியா வந்திருந்ததை ஒட்டி காஷ்மீர் சென்றிருந்தபோது ரஷ்யத் தலைவர்கள், 'காஷ்மீர் இந்தியாவுடன்தான் இருக்கவேண்டும்' என்று திட்டமாகக் கருத்தறிவித்திருந்தனர்.

அதேபோல, ஆப்கனிஸ்தான் சென்றிருந்தபோது, 'பக்தூனிஸ்தான் அமைக்க வேண்டுமென்ற ஆப்கன் கோரிக்கை நியாயமானதே' என்றும் கருத்தறிவித்திருந்தனர்.

இப்போது மேலைநாட்டு வல்லரசுகள், இரண்டு விவகாரங்களிலும் பாகிஸ்தானுக்கு ஆதரவாகக் கருத்தறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய அரசியல் வட்டாரம், காஷ்மீர் பற்றி 'சீட்டோ' கருத்தறிவிப்பதற்குள்ள யோக்கியதாம்சம் பற்றி ஆச்சரியமடைந்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

திராவிடத் தாயின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்க 33 கம்பெனிகள் முயற்சித்ததாகவும், அவற்றில் 12 கம்பெனிகள் வெற்றிகரமாக வேலை செய்ததாகவும் செய்தி வெளியிட்டிருந்ததாக அந்த உறுப்பினர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இதுபற்றிக் கருத்தறிவித்த மந்திரி, இந்தப் பகுதிகளில் 1952-ல் ஆராய்ச்சி நடைபெற்றதாகவும், அங்கு கிடைப்பதாக அறிவிக்கப்பட்ட தங்கம், கந்தகம் முதலியன தோண்டி எடுக்கவேண்டிய அளவுக்கு இருப்பதாகக் கொள்வதற்கில்லை என்று கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவித்திருக்கிறார். மலபார் மாவட்டத்தில், மேலும் ஒரு தாலுகாவில் இதுபற்றி நடைபெறும் ஆராய்ச்சி உற்சாகமூட்டக் கூடியதாக இருப்பதாயும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கப்பல் அதிகாரிகள் வேலை நிறுத்தம்!

வேலை நிலைமையைச் சீர்திருத்த 'பாரத் லைன்' நிறுவனம் மறுப்பதை ஒட்டி, 'பாரத் லைன்'னைச் சேர்ந்த சுமார் 100 அதிகாரிகள் தங்கள் கப்பல்களில் இருந்துகொண்டே வேலை நிறுத்தம் செய்துள்ளனராம்; ஒரு கப்பல் பம்பாயிலும், ஆறு கப்பல்கள் கல்கத்தாவிலும் செயலற்றுக் கிடக்கின்றனவாம்.

கம்யூனிஸ்டுக் கட்சி செயலாளர் கைது

தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் பம்பாய் போலீசார், பம்பாய் கம்யூனிஸ்டுக் கட்சிக் காரியதரிசி பி. பி. வைத்தியாவைக் கைது செய்துள்ளனராம்.

வரவு—செலவுத் திட்டம் வெளியானதின் எதிரொலி

இரு வியாபாரிகள் கைது!

பம்பாய், மார்ச் 8—

மத்திய சர்க்கார் வரவு—செலவுத் திட்ட உத்தேசங்கள் முன்கூட்டியே வெளியாகிவிட்டதையொட்டி, பம்பாய் நகரில் நேற்று மட்டும் 62 வியாபாரிகள் விசாரிக்கப்பட்டனராம்; இரு வியாபாரிகளைப் போலீசார் கைது செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவில் ஏக்கர் விகித சோளம் மகசூல் 1948-49-ல் 566 பவுண்டாக இருந்தது; அது 1954-55ல் 713 பவுண்டாக உயர்ந்துவிட்டது; ஏக்கர் விகித நெல் மகசூல் 1950-51-ல் 596 பவுண்டாக இருந்தது; அது 1953-54-ல் 805 பவுண்டாக உயர்ந்துவிட்டது.

பஞ்சாயத்துத் தேர்தல்

இவ்வாண்டு நடைபெற இயலாது என்கிறார் அமைச்சர்

"1952-ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஏதாவது ஒரு தேர்தல் நடந்துகொண்டிருக்கிறது; 1957-ல் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கிறது; இந்நிலையில் பஞ்சாயத்துத் தேர்தலை இவ்வாண்டு நடத்தினால் பொது மக்களுக்குச் சிரமமாகயிருக்கும்; ஆகவே, தான் பஞ்சாயத்துத் தேர்தல் ஒத்திப்போடப்படுகிறது,"

என்று, சென்னை சட்டசபையில், கேள்வி நேரத்தின்போது ஸ்தல ஸ்தாபன அமைச்சர் எஸ். எஸ் இராமசாமிப் படையாச்சி தெரிவித்திருக்கிறார்.

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

மார்ச் 10 : சென்னை
11 : புதுவை
12 : சூலூர் (கோவை)
18 : வாணியம்பாடி
19 : மையனூர் (தெ. ஆ)
25 : திருமங்கலம்
26 : சிவகிரி

மதியழகன்—தில்லை-வில்லாளன்

சுற்றுப்பயணம்

மார்ச் 11 : குனியமுத்தூர் (கோவை)
13 : கணியூர்
14 : பெஞ்சமடை
15 : உடுமலை (திருமணம்)
18 : துறையூர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

9—3—56 மாலை 6-30 மணிக்கு சென்னை. சாலைவிநாயகர் கோயில் தெரு எண் 17 முத்தமிழ் மன்றப் பணிமனையில். தோழர் முத்தமிழ் மணி தலைமையில் 'இளைஞர்கள் கடமை' எனும் பொருள் பற்றி சொற்பயிற்சி கூட்டம்நடைபெறும்

பிரெஞ்சு மொழியில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரம் வழங்கியிருக்கிறது. இந்த ஆண்டிலும் ரூ. 15 ஆயிரம் வரை வழங்கவிருக்கின்றனர்

இப்போது சுமார் 13 இலக்கியங்கள் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் முக்கியமானவை, தமிழில் உள்ள சிலப்பதிகாரம் பிரெஞ்சு மொழியில் ஆக்கப்படுகிறது. ரிக்வேதத்தின் சில பகுதிகளும் பிரெஞ்சு மொழியில் தயாராகிறதாம்.

இந்தத் தகவல்களை டில்லி மக்கள் சபையில், கல்வி மந்திரியின் மக்கள் சபைச் செயலாளர் டாக்டர் எம் எம். தாஸ் தந்திருக்கிறார்.

****

அர்த்தாலுக்குப் பிறகு!

10—3—56 சனி மாலை 5-மணிக்கு

நுங்கம்பாக்கம்

இரயிலடிக்கு அருகிலுள்ள

தி. மு. க. திடலில்

★

பேசுவோர் :

அண்ணா
நெடுஞ்செழியன்
நடராசன்
மதியழகன்
கருணாநிதி
கண்ணதாசன்
கல்யாணசுந்தரம்
ஏ. கோவிந்தசாமி
சி. பி. சிற்றரசு
கே. ஆர். இராமசாமி
எம். ஜி. இராமச்சந்திரன்
சத்தியவாணிமுத்து
அலமேலு - அப்பாதுரை

★

இன்னிசை :

இசைச்செல்வி ஜி. கஸ்தூரி — குடந்தை சீனிவாசன்

—தி. மு. கழகத் தலைமை நிலையம்

****

கூட்டணி மீது காமராசர் பாய்ச்சல்

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

களா?

மக்கள் அவரை ஆதரிக்கிறார்களாம்! மக்களின் பலம் அவருக்கு இருப்பதால், அவர் கைகள் 'பலமாகவே' இருக்கின்றனவாம்! கூட்டணியினர் கிளர்ச்சி நடத்தியது, அவர் கைகளை பலப்படுத்துவதற்கே என்று கூறுகிறார்களாம்; 'இவர்கள் யார், என் கைகளை பலப்படுத்த? என் கைகள் பலமாகவே இருக்கின்றன' என்று வீரம் பேசினராம், இந்த விருதுநகரார்!

தான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் அதிகாரம் செலுத்த வேண்டுமென்பதற்காகவே அவர், பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க வில்லையாம்!

தமிழ் நாட்டில் பின் எதற்காக கிளர்ச்சி நடத்தப்பட்டது? இரயில்களை நிறுத்திக் குழப்பம் விளைவித்தார்கள்: சில நாளைக்கு அதற்காகச் சிறைப்பட்டார்கள்; இது என்ன ஒரு பெரிய போராட்டமா?' என்றும் கேள்வி எழுப்பினராம், பெரும் 'போராட்ட வீரரான' காமராசர்!

'காங்கிரஸ் எப்போதாவது, மக்கள் விரும்பாத ஒன்றை அவர்கள் மீது; திணிக்க முயன்ற குற்றத்திற்கு ஆளானது உண்டா?' என்று கேட்டு, காங்கிரசிற்குப் 'படி தாண்டாப் பத்தினி' என்ற பட்டம் பெற்றுத்தர முயன்றாராம், காமராசர்—தான், பதவிக்கு வந்ததே மக்கள் விரும்பாத குலக்கல்வித் திட்டத்தைக் காங்கிரசின் பெயரால் அமுல் செய்த ஆச்சாரியாரைத் துரத்திய பின்னர்தான் என்பதை மறந்துவிட்டு!

'எங்களுடைய உண்மையான கருத்துக்களை வெளிப்படையாகச் சொல்ல நாங்கள் அஞ்சியதே இல்லை' என்றாராம், தட்சிணப் பிரதேசம் பற்றி இன்னும் இரண்டுங்கெட்டானகப் பேசி வரும் காமராசர்!

"கிளர்ச்சி நடத்திய கூட்டணியினர், எந்த அழிவையும் தாங்கிக் கொள்ளும் உரம் படைத்தவர்கள் என்று கூறிக்கொள்கின்றனர்; அவர்களுக்கு உறுதி இருக்குமானால், தங்கள் எண்ணங்களை வெளிப்படையாகச் சொல்வதுதானே; எது தடுக்கிறது? உண்மையில் அவர்கள் வீரர்களாயில்லை — கோழைகளாக யிருக்கின்றனர் தங்களைப் போலவே தமிழ் மக்களும் இருப்பர் என்று எண்ணினர். தனிமையில் மனிதன் வாழ முடியாது என்பதை உணராது போய்விட்டனர்.

"என்றாவது ஒருநாள் மக்கள் ஒன்று சேர்ந்து வாழ்வதையே விரும்புவார்கள் என்ற உண்மையினால்தான், அவர்கள், 'வடநாட்டு ஆதிக்கம்,' 'மலையாளி ஆதிக்கம்' என்ற சுலோகங்களால் மக்களைப் பிரிக்க எடுத்துக் கொண்ட முயற்சியில் தோல்வி கண்டனர். இந்த மாதிரி அச்சுறுத்தல்களால் குழந்தைகளைத் தான் பயமுறுத்த முடியும் என்பதை அவர்கள் நினைத்துப் பார்க்கவில்லை. நாட்டில் வெறும் குழப்பத்தை ஊட்டுபவர்களாகத்தான் இருக்கிறார்கள்" என்றும் பேசினராம், 'பெரிய இடத்தில்' அமர்ந்திருப்பதால், 'பெரிய மனிதராகி' யிருக்கும் காமராசர்!

"தமிழ் மாநிலம் வேண்டுமென்று விரும்பினால், முதலில் ஒரு தனித் தமிழ் மாநிலம் அமைப்பது எப்படி சாத்தியம் என்பதை எண்ணிப் பார்த்தாகவேண்டும். ஆந்திர, கன்னட, மலையாள மக்கள், நமக்கு அருகாமையில் வசிப்பவர்களாக—அண்டையில் வாழ்பவர்களாக இருக்கிறார்கள்; இவர்களிடமிருந்து நாம் பிரிந்து தனியாக எங்கே வாழ்வது? நமக்கு ஏன் தனியாக ஒரு மாநிலம் இருக்கவேண்டும்? அப்படி தனி மாநிலத்திற்கு அவசியம் என்ன?"

என்று கேட்டதின் மூலம், 'தட்சிணப் பிரதேச'த் திட்டத்தைத்தான் ஏற்றுக்கொண்டிருப்பதை தெளிவாக எடுத்துக்காட்டியதாகவே; அவர் பேசும்போது கேட்டவர்கள் கூறுகின்றனர்!

"இந்தக் கேள்விகளைக் குறித்தெல்லாம் யோசிக்காமலேயே, செப்பிடு வித்தை நடத்த முயற்சிக்கின்றனர், கூட்டணியினர். மாணவர்களை அர்த்தாலில் பங்கு கொள்ள ஏன் அழைத்தார்கள்தெரியுமா? மக்களிடத்தில் அவர்களுக்கு ஆதரவிருக்கவில்லை; அதனால்தான்! அவர்கள் தனியாக நின்றிருந்தால் அவர்களை யாரும் ஏறிட்டும் பார்க்க மாட்டார்கள். அவர்கள் இப்போது நடத்திய கிளர்ச்சியினால் எனக்கு ஒன்றும் ஆபத்து வந்துவிடவில்லை; ஏதாவது வருமானால் நான் முதன் மந்திரி பதவியைத் துறந்துவிட நேரிடலாம். நான் என்ன முதன் மந்திரி பதவியையேவா நம்பிக் கொண்டிருக்கிறேன்? இது ஒன்றும் பரம்பரைச் சொத்தல்ல; மக்கள் விரும்பினால், உடனே நான் பதவியைத் துறப்பேன்,"

என்றும் பேசி, தனக்கு ஏற்பட்டுள்ள அச்சத்தை வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறார் காமராசர்!

அமெரிக்கா செல்வார்?

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசன்ஹோவருடன் உரையாடல்கள் நிகழ்த்த எச்சமயத்திலும் வாஷிங்டன் புறப்படத் தாம் தயாராகயிருப்பதாக சோவியத் பிரதமர் புல்கானின் தெரிவித்துள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.